(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. 1(5).] **பாராளுமன்றம்**

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 பெப்ரவரி 25 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 மார்ச் 08, செவ்வாய்க்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

புலமைச் சொத்து (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மிகைக்கட்டண வரி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நிதி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் துருக்கி குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் வருமானம் மீதான வரிகள் தொடர்பில் இரட்டை வரிவிதிப்பைத் நீக்குவதற்கும் வரி செலுத்தாது தட்டிக் கழித்தல் மற்றும் தவிர்ப்பு என்பவற்றைத் தடுப்பதற்குமாக 2022 சனவரி 28 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்டதும், 2022.02.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான உடன்படிக்கையானது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 75(1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2022, மார்ச் 10, வியாழக்கிழமை)**

2668/2022

கௌரவ எம்.எஸ்.தௌபீக்,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குரிய வக்குப் பிரிவில் R/1297/G/17, R/1297/G/48, R/1566/G/51, R/1566/G/52, R/0860/G/35, R/0860/G/49, R/0930/G/16 மற்றும் R/0930/G/37 ஆகிய ஒவ்வொரு இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு பள்ளிவாசலினதும் பெயர், முகவரி மற்றும் அப்பள்ளிவாசல் பதிவு செய்யப்பட்ட திகதி;

(ii) மேற்படி ஒவ்வொரு பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக இதுவரை நியமிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரினதும் பெயர், முகவரி மற்றும் அந்நபரினது நியமனத்தின் செல்லுபடிக் காலம்;

என்பன வெவ்வேறாக யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முதற் தடவையாக பதிவு செய்யப்பட்ட திகதி தொடக்கம் மேற்படி ஒவ்வொரு பள்ளிவாசலுக்காகவும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நியமிக்கப்படும்போது வக்குப் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பள்ளிவாசலும் முதற் தடவையாக பதிவு செய்யப்படும்போது சமர்ப்பிக்கப்பட்ட உறுதிகளின் பிரதிகள் சபா பீடத்திற்குச் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல்,ஏன்?

---

## 2022 மார்ச் 11, வெள்ளிக்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா 22/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களை வலுவூட்டுதல்,— இலங்கையில் அரிசி விலையைக் கட்டுப்படுத்துவதற்கான ஆற்றலைக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் இன்றளவில் பல சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளதனால், அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அரசாங்கம் துரிதமான வேலைத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 23/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் நிலையப்படுத்தல்,— பொது மக்களின் வரிப் பணத்தில் பேணப்படுகின்ற அரச நிறுவனங்களை தனியார் கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருந்தொகை பணம் வீணாக செலவாவதாலும், மேற்படி நிறுவனங்களை அரச கட்டிடங்களில் நிலையப்படுத்துவதன் மூலம் பெருமளவு பணத்தை சேமிக்க முடியுமென்பதாலும், சகல அரச நிறுவனங்களையும் அரசுக்குச் சொந்தமான கட்டிடங்களில் மாத்திரம் நிலையப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 24/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வீழ்ச்சியடைந்துள்ள நிதி நிறுவனங்களை மீளக் கட்டியெழுப்புதல்,— ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிதிச் சந்தை மீது நிதி நிறுவனங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும், கடந்த காலம் பூராகவும் இந்நாட்டின் சில நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளமையினாலும், அதன் வைப்பாளர்கள் பொதுவாகப் பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ளமையினாலும் குறிப்பிட்ட நிதி நிறுவனங்களை மீள்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 25/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்நாட்டு டின் மீன் உற்பத்தியை அதிகரித்தல்,— இலங்கையைச் சூழ கடல் காணப்படுகையில், நாட்டுக்குத் தேவையான டின் மீன்களை இறக்குமதி செய்வதற்காக வருடாந்தம் பெருந்தொகை நிதி வெளிநாடுகளுக்குச் செலவிட வேண்டி ஏற்படுவதனால் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்காக உள்நாட்டு டின் மீன் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களினால் கழிவகற்றப்படுதல்,— இலங்கையில் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்கள் கழிவுகளை அகற்றும் பொறுப்பினை இன்றளவில் தனியார் கம்பனிகளுக்குக் கையளித்துள்ளமையின் காரணமாக, வரி செலுத்தும் மக்களது பெருந்தொகை நிதி குறிப்பிட்ட கம்பனிகளைச் சென்றடைவதனால், குறித்த பணிகளை குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 272022

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி நிறுவனங்களில் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துதல்,— பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்த நிலையில் காணப்படும் வாகனங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள நிலையானது மிக சாதாரண ஒரு காட்சியாக அமைந்துள்ளதாலும், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு புதிதாக வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக, இந்த வாகனங்களை திருத்துவதன் மூலம் பெருந்தொகை நிதியை மீதப்படுத்த முடியுமென்பதாலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் பழுதடைந்துள்ள வாகனங்களைத் திருத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 28/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நலனோம்புகை வசதிகளை வழங்குதல்,— இலங்கைக்கு ஆகக்கூடிய அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்புச் செய்கின்ற வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பங்களின் நலனோம்புகைக்காக துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 29/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— புகையிரதப் பெட்டிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்,— புகையிரதத் திணைக்களம் பெருமளவு பௌதீக வளங்களையும் மனித வளங்களையும் கொண்டதொரு திணைக்களமாக இருப்பதாலும், இந்நாட்டிற்கு புகையிரதப் பெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும்போது பெருந்தொகையான பணம் வெளிநாடுகளைச் சென்றடைவதாலும், இந்நிலையைத் தடுப்பதற்கு புகையிரதப் பெட்டிகளை இந்நாட்டில் உற்பத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.30/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கண்டங்கத்திரியை உள்நாட்டில் செய்கை செய்தல்,— கடந்த சில ஆண்டுகளாக கண்டங்கத்திரியை இறக்குமதி செய்ததன் காரணமாக பெருந்தொகையான பணம் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் அந்நிலையை தடுத்து நிறுத்துவதற்கு உள்நாட்டில் கண்டங்கத்திரி செய்கையை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.31/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— இஞ்சி செய்கையினை முன்னேற்றுதல்,— கடந்த சில வருடங்களாக இலங்கைக்கு இஞ்சி இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான பணம் வெளிநாடுகளுக்கு சென்றடைந்ததால் இந்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு பெருமளவு பணம் சென்றடைவதைத் தடுப்பதற்காகவும், இஞ்சி செய்கையினை உள்நாட்டில் முன்னேற்றுவதற்காகவும் துரித நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா 32/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமானளவு குடும்பங்கள் வெற்றிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளதுடன் தற்போது குறித்த வெற்றிலைப் பயிர்ச் செய்கையாளர்கள் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளமையால், இந்நிலைமையை தணிப்பதற்காக துரித வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார் செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் தரிசு நிலங்களாக மாறியுள்ள வயல்களில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்,— ஒரு நாட்டின் அபிவிருத்தியில் உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியத்துவம் பெறுவதனால் வடமேல் மாகாணத்தில் தற்போது தரிசு நிலங்களாக காணப்படுகின்ற வயல்களில் மீண்டும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான துரிதமானதும் பொருத்தமானதுமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருநாகல் மாவட்டத்தில் யானை-மனித மோதலைத் தீர்த்தல்,— வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்திலுள்ள ஏராளமான கிராமங்களில் யானை - மனித மோதல் மிக உக்கிரமாக காணப்படுவதனால் அதற்கான நிரந்தரத் தீர்வாகப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தினால் தயார்செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— குருணாகல் மாவட்டத்தில் சிறு குளங்களை மறுசீரமைத்தல்,— வடமேல் மாகாணத்திலுள்ள அதிகமானோர் கமத்தொழில் சார்ந்த தொழில்களில் ஈடுபடுவதானலும், அம்மக்களுடைய வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்காக நீர் அத்தியாவசியமான காரணியொன்றாக அமைந்துள்ளதாலும் வடமேல் மாகாணத்தில் காணப்படுகின்ற சிறு குளங்கள் அனைத்தையும் மறுசீரமைப்பதற்காக அரசாங்கத்தினால் உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வட மேல் மாகாணத்தில் தொல்லியல் முக்கியத்துவமிக்க இடங்களை பேணிப் பாதுகாத்தல்,— ஒரு நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு அந் நாட்டின் வரலாறு மிக முக்கியமென்பதாலும், இன்றளவில் இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரியங்களுக்கு ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பான பல்வேறு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாலும், எதிர்கால சந்ததியினருக்காக வட மேல் மாகாணத்தின் தொல்லியல் சார்ந்த இடங்களை பேணிப் பாதுகாப்பதற்கு அரசாங்கத்தினால் துரித வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— வடமேல் மாகாணத்தில் நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாத்தல்,— வடமேல் மாகாணத்தில் கணிசமான அளவினர் கமத்தொழிலில் ஈடுபடுவதனால் அவர்களது எதிர்காலத்தை பாதுகாக்கும் பொருட்டு இப்பிரதேசத்தின் விலைமதிப்பற்ற வளமான நீரேந்து பிரதேசங்களையும் நீர் ஊற்றுக்களையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.39/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— எல்லே விளையாட்டை மேம்படுத்துதல்,— எல்லே விளையாட்டானது இலங்கையில் கிராமிய மக்களின் விளையாட்டாகத் திகழ்வதனால், அதனை மேலும் மேம்படுத்துவதற்கான துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு சிறைச்சாலைகளை இடமாற்றுதல்,— தற்சமயம் இலங்கையிலுள்ள பெரும்பாலான சிறைச்சாலைகள் நகரங்களை அண்டியதாக அமைந்துள்ளதாலும், சிறைச்சாலைகளுக்குள் பாரிய இடநெருக்கடி நிலவுவதாலும், இச்சிறைச்சாலைகளை நகரங்களிலிருந்து வெளிப் பிரதேசங்களுக்கு இடமாற்றி, தற்போது சிறைச்சாலைகள் அமைந்துள்ள வளாகங்களிலிருந்து உச்சப் பயனை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.41/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல்,— வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளில் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாவதன் காரணமாகவும், மேற்படி தொழிலாளர்களுக்கு அந்நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களினால் மிகச் சொற்பமான சேவையே வழங்கப்படுவதனாலும், வெளிநாட்டிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் சிரமங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக ஒம்புட்சுமன் ஒருவரை நியமனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— ஆனவிழுந்தாவ ஈர நிலத்தைப் பாதுகாத்தல்,— சர்வதேச ரம்சார் சமவாயத்தின் மூலம் ஈர நிலமாக பெயரிடப்பட்டுள்ள ஆனவிழுந்தாவ ஈர நிலத்தை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவர சூழல் தொகுதியைப் பாதுகாத்தல்,— சூழல் சமநிலையைப் பாதுகாப்பதில் பெரும்பங்காற்றுகின்ற புத்தளம் மாவட்டத்தின் கண்டல் தாவரச் சூழல் தொகுதியினை எதிர்கால சந்ததிக்காக பாதுகாப்பதற்கு அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்ற இலங்கைத் தொழிலாளர்களை அவர்களது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்குதல்,— கொவிட்-19 தொற்று நோய் காரணமாக வெளிநாடுகளில் தமது தொழில்களை இழந்து பெரும் துன்பகரமானதொரு காலப்பகுதியை கடந்து இலங்கைக்குத் திரும்புகின்ற வெளிநாடு வாழ் இலங்கைத் தொழிலாளர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள முறையியல் இத் தருணத்தில் அவர்களால் தாங்க முடியாத பணச்சுமையாக உள்ளதால் உரிய காலப்பகுதியில் தமது இல்லங்களில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாவதற்கு ஏற்ற வகையில் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

# 2022 மார்ச் 22, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

7/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய தேசிய விவசாயக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த அங்கீகாரம் வழங்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி புதிய தேசிய விவசாயக் கொள்கை தயாரிப்பு நடவடிக்கையின் தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(iv) அது தயாரித்து முடிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

36/2022

கௌரவ புத்திக பத்திறண,— வன சீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரின வகைகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றுக்கு மத்தியில் அழிவடையும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதன் காரணமாக சிவப்பு தரவுப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஈரூடக உயிரின வகைகள் யாவை;

(iii) இன்றளவில் அழிவடைந்துள்ள இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரின வகைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரினங்கள் தொடர்பாக அண்மையில் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அது மேற்கொள்ளப்பட்ட திகதி யாது;

(iii) இன்றேல், அத்தகைய ஆய்வு நடத்தப்படுமா;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இலங்கைக்குத் தனித்துவமான ஈரூடக உயிரினங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் மேலதிகமாகவும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

246/2022

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பலாங்கொடையிலிருந்து குருபெவில, மெத்தேகந்த, ஹெலவத்த ஆகிய கிராமங்களுக்கு ஒரு நாளில் பயணிகள் பேருந்துகள் செயற்படுத்தப்படும் தடவைகளின் எண்ணிக்கை அண்மைக்காலமாக குறைக்கப்பட்டுள்ளதாகவும்;

(ii) இதனால் அப்பிரதேச மக்கள் பாரிய சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாராரா?

(ஆ) (i) மேற்படி கிராமத்திற்கு நாளொன்றுக்குச் செயற்படும் பயணிகள் பேருந்துகளின் பயணத் தடவைகளின் எண்ணிக்கையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அப்பேருந்து பயணத் தடவைகளின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

570/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லங்கா மினரல் சேன்ட்ஸ் லிமிடட் நிறுவனத்தினால் 85,000 மெட்ரிக் டொன் கனிம மணல் விற்பனை செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி கனிம மணலை கொள்வனவு செய்வதற்காக விண்ணப்பித்த ஒவ்வொரு கம்பனியினதும் பெயர், முகவரி மற்றும் முன்வைக்கப்பட்ட விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு கனிம மணலை கொள்வனவு செய்த ஒவ்வொரு கம்பனியினதும் பெயர், முகவரி மற்றும் விலைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) மேற்படி கொடுக்கல் வாங்கலின் போது நிதிரீதியான நட்டம் ஏற்பட்டுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1023/2022

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்கப் பாடசாலைகளில் பயிலிளவல் படைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், பயிலிளவல் படை வீரர்களுக்கு பயிற்சியளிக்கும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) இப் பாடசாலைகளின் எண்ணிக்கை போதியளவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பயிலிளவல் படைப் பயிற்சியை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ள பாடசாலைகள் காணப்படுகின்றதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி பாடசாலைகளில் பயிலிளவல் படை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதில் காணப்படுகின்ற இடையூறுகள் அடையாளங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) பயிலிளவல் படை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்குத் தேவையான பயிற்சியை ஆசிரியர்களுக்கு வழங்கி பாடசாலை மாணவர்களுக்கு பயிலிளவல் படைப் பயிற்சியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1179/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1193/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் சீமேந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான காணிகளின் மொத்த விஸ்தீரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் பல்வேறு ஆட்கள் மற்றும் நிறுவனங்களினால் இன்றளவில் சட்டவிரோதமாக கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்காக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1312/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.03.05 ஆந் திகதி கண்டி, திகன பிரதேசத்தில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பில் அறிவாரா என்பதையும்;

(ii) அது தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக மேற்படி விசாரணைக்கான அறிக்கையின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேலே தெரிவிக்கப்பட்ட சம்பவத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்களுக்கெதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) அவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படுவதனைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1470/2022

கௌரவ ரோஹண பண்டார,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அநுராதபுர மாவட்டத்தில் சுத்தமான குடிநீர் இல்லாத கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவினதும் பெயர் மற்றும் சுத்தமான குடிநீர் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) அநுராதபுர மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1730/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள கமநல சேவை பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) 2021 பெரும்போகத்திற்காக பசளை பெற்றுக்கொள்வதற்கு கோரிக்கை விடுத்துள்ள நெல் விவசாயிகளின் எண்ணிக்கை மேற்படி ஒவ்வொரு கமநல சேவை பிரிவுகளுக்கும் அமைய தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) அவர்களுள் தற்போது பசளை வழங்கப்பட்டுள்ள நெல் விவசாயிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பசளை வழங்குவது தொடர்பில் பொலன்னறுவை மாவட்டத்தில் நிலவுகின்ற சிக்கல்களை தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2022 மார்ச் 23, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

5/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அதிவேக நெடுஞ்சாலைகளை அமைக்கும்போது சுவீகரிக்கப்படும் தனியார் காணிகளுக்கு நட்ட ஈடு செலுத்துவதற்கும் நிர்வாக செலவுகளுக்கும் தேவையான பணத்தொகை பொதுத் திறைசேரியினால் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு வழங்கப்படுகின்றது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கொட்டாவ தொடக்கம் கொடகம வரையிலான பகுதி, கொடகம தொடக்கம் அம்பாந்தோட்டை வரையிலான பகுதி, கொட்டாவ தொடக்கம் கட்டுநாயக்க வரையிலான பகுதி, மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை ஆகிய ஒவ்வொரு நெடுஞ்சாலையையும் அமைப்பதற்குரியதாக —

(i) நட்ட ஈடு செலுத்துவதற்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட பணத் தொகை;

(ii) இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள நட்ட ஈட்டுத் தொகை;

(iii) செலுத்துவதற்கு எஞ்சியுள்ள நட்டஈட்டுத் தொகை;

(iv) நட்ட ஈடு செலுத்தும் விடயத்தில் தடைகள் உள்ளதாயின் அத்தடைகள்;

(v) செலுத்துவதற்கு எஞ்சியுள்ள நட்ட ஈட்டுத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி;

என்பன வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

33/2022

கௌரவ புத்திக பத்திரண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் திராட்சை உற்பத்தி ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) திராட்சை உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள திராட்சை இனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) திராட்சை செய்கைக்கு உகந்த காலநிலை காணப்படுகின்ற மாவட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திராட்சை இறக்குமதி செய்வதற்கு செலவிடப்பட்ட தொகை ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை திராட்சையை ஏற்றுமதி செய்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் திராட்சை ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

249/2022

கௌரவ ஹேஷா விதானகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கையின் வருடாந்த தேங்காய் உற்பத்தி ஒவ்வொரு வருடத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாது;

(ii) மேற்படி காலப்பகுதியில் உள்ளூர் சந்தையில் தேங்காய் விலையில் எவ்வளவு மாற்றம் ஏற்பட்டது;

(iii) இன்றளவில் உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை அதிகரிப்பின் மீது தாக்கம் ஏற்படுத்தியுள்ள காரணிகள் யாவை;

(iv) இலங்கையில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

569/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிராமிய மூலதன வங்கி என்ற பெயரில் வங்கி நிறுவப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) இலங்கை மத்திய வங்கியினால் இவ்வங்கி ஒழுங்குறுத்தப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1022/2022

கௌரவ சாந்த பண்டார,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) பத்திக் கைத்தொழில் உள்நாட்டுக் கைத்தொழிலாக இலங்கையில் காணப்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) இன்றளவில் பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழில்முயற்சியாளர்கள் இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கு அமைச்சிடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) பத்திக் உற்பத்தியில் மேற்படி தொழில்முயற்சியாளர்கள் பழைய செயன்முறைகளையும் வடிவமைப்புகளையுமே பயன்படுத்துகின்றார்கள் என்பதையும் அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஈ) புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நவீன வடிவமைப்பின் பிரகாரம் பத்திக் உற்பத்தி செய்வதற்கு வழிகாட்டும் வேலைத்திட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1176/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வ/ஹிங்குராணை சீனித் தொழிற்சாலை (தனியார்) நிறுவனத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1192/2022

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021 சனவரி மாதம் தொடக்கம் 2022 சனவரி வரையான காலப்பகுதிக்காக நீதி அமைச்சிற்கு கட்டடமொன்றை வாடகைக்குப் பெறுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கட்டடம் அமைந்துள்ள இடத்தின் முகவரி யாதென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை வாடகைக்குப் பெறுவதற்காக செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) கொவிட் -19 தொற்றுநோய் காரணமாக இலங்கை நிதி நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ள தருணத்தில், இவ்வாறு கட்டடங்களை வாடகைக்குப் பெறுதல் பொருத்தமானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1311/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2021ஆம் ஆண்டில் இலங்கையில் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீது அறவிடப்பட்டுள்ள வட்டி வீதம் யாது;

(ii) நுண் நிதிக் கடன் மீது அறவிடப்படும் வட்டி வீதம் யாது;

(iii) நுண் நிதிக்கடன் வழங்குவதற்காக அரசாங்கம் சட்டரீதியான அனுமதியை வழங்குகின்றதா;

(iv) ஆமெனில், இன்றளவில் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1467/2022

கௌரவ ரோஹண பண்டார,— அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அனுராதபுர நகர எல்லைக்குள் பல சட்டவிரோத நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி நிர்மாணிப்புக்களைத் தடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1733/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பெனியினால் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெளியிடப்பட்டுள்ள பத்திரிகைகள்/ சஞ்சிகைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியில் ஒவ்வோர் ஆண்டிலும் அந்நிறுவனத்தின் இலாபம்/நட்டம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பெனிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு ஊழியரினதும் பெயர், முகவரி மற்றும் பதவிப் பெயர் என்பன தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுதந்திரமான ஊடகக் கலையை ஏற்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப்பத்திரிகை கம்பெனியைப் பயன்படுத்த எதிர்பார்க்கும் விதம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2022 மார்ச் 24, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் குருநாகல் தொடக்கம் தம்புள்ளை வரையிலான நான்காம் கட்டத்தின் நிர்மாணப் பணிக்கான ஒப்பந்தத்திற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், இந்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பித்த கம்பெனிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நெடுஞ்சாலையை அமைக்கும் பணிகளின் தற்போதைய முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) மேற்படி நெடுஞ்சாலையை அமைப்பதற்கு நிதியைப் பெற்றுக்கொள்ளும் மூலம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1178/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தின் கீழ் வருகின்ற, திறைசேரிச் செயலாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டத்திற்கு முரணான செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்துக்கள் மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண்பதற்காக புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், அவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அவர்களுக்கெதிராக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்வரும் காலங்களில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?